V8T

விருதுநகர் மாவட்டப் பொதுத் தேர்வுகள்
மூன்றாம் இடைப் பருவ பொதுத் தேர்வு - பிப்ரவரி 2023

-----

## வகுப்பு 8

நேரம்: 1.30 மணி | தமிழ் | மதிப்பெண்கள்: 50

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** **7×1=7**

1) ஒன்றே ............. என்று கருதி வாழ்வதே மனிதப் பண்பாகும்.
   அ) குலம் ஆ) குளம் இ) குணம் ஈ) குடம்
2) மனிதர்கள் தம் ............. தீய வழியில் செல்லவிடாமல் காக்க வேண்டும்.
   அ) ஐந்திணைகளை ஆ) அறுசுவைகளை
   இ) நாற்றிசைகளை ஈ) ஐம்பொறிகளை
3) அயோத்திதாசர் நடத்திய இதழ் .............
   அ) ஒரு பைசாத் தமிழன் ஆ) காலணாத் தமிழன்
   இ) அரைப் பைசாத் தமிழன் ஈ) அரையணாத் தமிழன்
4) அம்பேத்கரின் சமூகப் பணிகளைப் பாராட்டி இந்திய அரசு ............. விருது வழங்கியது.
   அ) பத்மஸ்ரீ ஆ) பாரத ரத்னா இ) பத்மவிபூசன் ஈ) பத்மபூசன்
5) இரட்டுறமொழிதல் அணியின் வேறுபெயர் ............. அணி.
   அ) பிறிதுமொழிதல் ஆ) வேற்றுமை இ) உவமை ஈ) சிலேடை
6) 'இன்பதுன்பம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .............
   அ) இன்பம்+துன்பு ஆ) இன்பம்+துன்பம் இ) இன்ப+அன்ப ஈ) இன்ப+அன்பு
7) விழித்து+எழும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் .............
   அ) விழியெழும் ஆ) விழத்தெழும் இ) விழித்தழும் ஈ) விழித்து எழும்

**ஆ) எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளி:** **5×2=10**
**3-வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

1) மனிதனின் மனம் கலங்கக் காரணமாக அமைவது யாது?
2) அயோத்திதாசரிடம் இருந்த ஐந்து பண்புகள் யாவை?
3) "கான" எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.
4) மனிதர்களின் பொது இயல்பாகக் கன்னிப்பாவை நூல் கூறுவது யாது?
5) கவலைகளைக் கவிஞர் எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?
6) அம்பேத்கர் தன் பெயரை ஏன் மாற்றிக்கொண்டார்?
7) பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?

**இ) அடிபிறழாமல் எழுதுக:** **5**

1) 'ஒன்றே குலமும்' எனத் தொடங்கும் ஒன்றே குலம் மனப்பாடப் பாடலை எழுதுக.

**ஈ) எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி:** **3×4=12**

1) அரசியல் விடுதலை பற்றிய அயோத்திதாசரின் கருத்துகள் யாவை?
2) பூமி எப்போது பாதையாகும்?
3) இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் உருவாக அம்பேத்கர் ஆற்றிய பணிகள் யாவை?
4) வேற்றுமை அணி என்றால் என்ன?

**உ) எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி: 2×5=10**

1) அன்றாட வாழ்வில் நாம் பிறருக்கு எத்தகைய உதவிகளைச் செய்யலாம்?

2) வாழும் முறை, சமத்துவம் பற்றிய அயோத்திதாசரின் சிந்தனைகளைத் தொகுத்து எழுதுக.

3) பூனா ஒப்பந்தம் பற்றி எழுதுக.

**ஊ) ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளி: 1×6=6**

1) புத்தகம் வாங்கி அனுப்புமாறு உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.

2) குழந்தை கிருஷ்ணாவின் பண்புநலன்களைப் பற்றித் தொகுத்து எழுதுக.

----------

www.Padasalai.Net